காஞ்சி

நிறுவனர்: அண்ணாதுரை

25 – 6 – 72

★

உள்ளே......

தீண்டாமை!
(அறிஞர் அமரர் அண்ணா)

★

நகைச்சுவை நாடகம்!
(திறனாய்வுக் கட்டுரை)

★

இது கூக்குரலா
அல்லது
கொள்கைக் குரலா?
(கட்டுரை)

★

கூந்தலிலே
மை தடவி!
(சிறுகதை)

★

உடைபடாததேங்காய்!
(பேட்டி : தேங்காய் சீனிவாசன்)

விலை 25 காசு

வடவர் காலகளிலே!

(பாவலர். கருமலைப் பழம்நீ)

வடவர் கால்களிலே! - ஆ!
வடவர் கால்களிலே!

வடவர் கால்களிலே! - பல
மாநிலங்கள் நாளும் வந்து விழுந்துடல்
அடங்கு கின்றனவே! - மைய
ஆட்சியின் ஆணைக்கு காத்திருந்தே நடை
ஒடுங்கு கின்றனவே! - அவர்
உள்ள உரிமை அனைத்தும் பறித்தே
நடத்து கின்றனவே! - சன
நாயகம் பேசி சமத்துவம் பாடி ......

வடவர் கால்களிலே! - ஆ!
வடவர் கால்களிலே!

குருவிக் கூட்டினிலே! - இளங்
குஞ்சுகள் முற்றி பறந்துக் களிப்புடன்
உரிமைப் பாடுதல் பார்! - அட!
ஊறும் உரிமை உணர்வுகள் இன்றிச்
சுருங்கிப் போயின ரே! - நிதம்
சொந்ததன் நாட்டில் துன்பம் சுமந்தே
வருந்து கின்றனரே! - உயர்
மண்ணகம் வாழ விடுதலை தானின்றி ......

வடவர் கால்களிலே! - ஆ!
வடவர் கால்களிலே!

★



தீண்டாமை

(அறிஞர் அமரர் அண்ணா)

தமிழ் நாட்டிலே எங்கு பார்த்தாலும் சிற்பிகளின் சிந்தனையைச் சிறப்புற விளக்கிடும் எழில் மிகுந்த கோயில்கள் உள்ளன. முடியுடைய மூவேந்தர்களும், பல்லவரும் கட்டிய ஆலயங்கள் — அவை ஒவ்வொன்றுக்கும் சிறப்புகள். மகிமைகள் கூறப்பட்டுள்ளன பாடல் பெற்ற ஸ்தலங்கள் என்று புகழப்படுகின்றன ஒவ்வொரு கோயிலுக்கும் ஒவ்வொரு அற்புதம் கூறப்படுகின்றது. தாயுமானவர், தயாபரர், தீராத வல்வினையைத் தீர்த்தவர், தில்லையில் திருநடனம் புரிபவர், திருவரங்கத்து அண்ணல் என்று பெயரிலேயே பொருட் செறிவும் வைத்து பேசப்படுகிறது. பாடல் கேட்டு கதவு திறக்கப்பட்ட கோயில், படிக் காசு கிடைத்த கோயில் தூது சென்ற தலம், என்று பல்வேறு மகிமை கதைகள் கூறப்படுகின்றன. அதாவது ஆலயங்கள் ஏராளமாக உள்ளன. அவைகளின் அழகும் மகிமையும் பேசப்படுகின்றன. அங்கு சென்று சேவிப்பது இகபர சுகம் தரும் என்று பேசப்படுகிறது. கோயிலில்லா ஊரிலே குடியிருக்க வேண்டாம் என்று பழமொழி. திருக்கோயிலை வலம் வராத கால் என்ன காலோ, ஐயனை சென்று காணாத கண் என்ன கண்ணோ என்று பஜனைகள் நடக்கின்றன. தூய்மையின் இருப்பிடம் என்று கூறப்படுகிறது, இவ்வளவு கூறிவிட்டு ஏடுகளை இதற்காக குவித்துவிட்டு, இறைவனின் இல்லங்களை எங்கும் எழுப்பிவிட்டு அவற்றின் அருமை பெருமை, ஆகியவற்றைப் பாட்டாகவும், கூத்தாகவும், படமாகவும் எடுத்துக் காட்டிவிட்டு, கேட்டதும் மக்களுக்கு ஓர் ஆவல்...பற்று பாசம் ஏற்படும்படி செய்துவிட்டு, ஆசையை தட்டி எழுப்பிவிட்டு, வீணையை மீட்கத் தொடங்கியதும், இசை கேட்க வருபவனின் காதுகளை அடைப்பதுபோல எழில்மிகு சித்திரத்தை தயாரித்துக் காண வாரீர் என்று அனைவரையும் அழைத்துக் காணவரும் சிலரின் கண்களை கட்டியிருப்பதுபோல பழச்சாற்றின் இனிப்பை கூறிக்கொண்டு, பருக கொஞ்சம் தருக என்று கேட்பவனை விரட்டுவதுபோல, ஆலயங்களுக்கு மகிமையும் பலனளிக்கும் சக்தியும் இருப்பதை கூறிவிட்டு, அங்கு வரக்கூடாது நுழையக் கூடாது என்று சிலரை அல்ல, ஏறக்குறைய எட்டு கோடி மக்களைத் தடுத்து வருகிறோம். இன்று நேற்றல்ல; தலைமுறை தலைமுறையாக அவர்கள் ஏதோ குற்றம் செய்வதற்கு தண்டனையாக அல்லது —அவர்கள் தமக்கு இழைக்கப்படும் கொடுமையாக நம்மை தண்டிக்கும் சக்தியைப் பெறாத காரணத்தால், இது முறையா—நீதியா—தருமமா — நெடுநாட்களுக்கு செல்லுமா—இவை கேள்விகள் அல்ல —எண்ணத்தில் கபடமில்லாத எவருக்கும் இருக்கும் இதயத் துடிப்புகள். பொருளைக் காட்டி மறைப்பார் குழந்தைகளிடமிருந்து பெற்றோர். நாமே புனித தலங்களின் பெருமையைக் கூறிப் பூட்டி விடுகிறோம். அங்கு ஒரு குறிப்பிட்ட சமூக மக்கள் வரக்கூடாது ஏன் என்று? முடிந்தது செய்து வந்தோம் என்பது தான் உண்மையான காரணம். மற்ற காரணங்கள், மனதிலே எழும் அலைகள், உண்மையல்ல, பயனும் பெருமையும் இருப்பதாகவும் ஒரு இடத்தை குறிப்பிட்டு, அதே இடத்துக்கு ஒரு குறிப்பிட்ட கூட்டத்தினரை நுழையக்கூடாது என்று சொன்னால், எவ்வளவு வேதனை இருக்கும். கூறும் நமக்கு இவ்வளவு கடினமான மனது இருக்கவேண்டும் என்பதை எண்ணிப் பாருங்கள். இன்றிரவு உங்கள் கையை மூடிக்கொண்டு, உங்கள் கொஞ்சு மொழிக் குழந்தையைக் கூப்பிட்டு தம்பி! கைக்குள்ளே ஓர் அருமையான வஸ்து இருக்கிறது. பளபளப்பானது அது யாருக்குமே கிடையாது என்று கூறுங்கள். குதித்துக் கொண்டே அந்த குழந்தை 'அண்ணா, அதை எனக்குக் கொடேன்' என்று கெஞ்சிக் கேட்கும்போது ஊஹூம் தரமுடியாது, உனக்கல்ல அது. தரமாட்டேன் என்று கூறிப் பாருங்கள். நீங்கள் படுகிறபாடு தெரியம். நானும்தான் எத்தனை கிள்ளுகளோ— எவ்வளவு மல்லுகளோ— அழக் கூடச் செய்யும் குழந்தை, அம்மா ஓடிவந்து குழந்தையை அணைத்துக்கொண்டு, 'பொல்லாத விளையாட்டு' என்று நமது கரத்தைப் பிடித்து இழுத்துக் 'குழந்தையை ஏமாற்றுதீர்கள்' என்று கோபிப்பார்கள். குடும்பத்தை பொறுத்த மட்டிலே; இதிலே ஒருவகை குதூகலம் கூட இருக்கும் குழந்தையின் உள்ளத்திலே எவ்வளவு வேதனை ஏற்பட்டிருக்கும் தெரியுமோ? குழந்தையின் மனமே இப்படி! நாம் செய்துவரும் கொடுமை, எட்டுக்கோடி மக்களுக்கு, இறைவனின் இல்லத்தின் அருமைகளை கூறிக்கொண்டே, 'அந்த இடத்தில் மட்டும் நீ வரக்கூடாது' என்று கூறுகிறோம். சரியா? என்று யோசித்து பாருங்கள்.

பக்தர்களை பரமன் வாழும் இடத்துக்குச் செல்லவொட்டாது தடுப்பது, சேயைத் தாயிடமிருந்து பிரிப்பது போன்ற பாதகமென்று, இதோபதேசம் செய்து பார்த்தாயிற்று. இந்த மார்க்கத்தின், இந்நாள் இருக்கும் இந்தத் தீண்டாமை, அந்நாளில் ஆன்றோர் வாழ்ந்த விதம் வேறு; சான்றோரெல்லாம் தீண்டாமையைக் கையாண்டதில்லை என்று விளக்கம் கூறியாகிவிட்டது. எந்த இந்து மதத்திலே அந்த மக்கள் இருப்பதாக கூறிப் பெருமைப்பட்டு புள்ளி விவரம் காட்டிப் பூரிக்கிறோயோ அதே மதத்திலிருக்

காஞ்சி
நிறுவனர்: அண்ணாதுரை

ஆண்டு சந்தா ரூ. 16 ஆறுமாத சந்தா ரூ. 8

மலர் 8 | 25—6—72 | இதழ்

கும் மக்களை மதத்தின் ஊற்றாக கருதப்படும் கோயிலையும் அனுமதிக்காதிருப்பது மனப் புண்ணை, ஆற்ற முடியா புண்ணை ஏற்படுத்திவிட்டது. இதனை ஆற்றிக் கொள்ள அந்த மக்களில் பலர், சிலுவைச் சூர்ணமோ குறைந்து வருகிறது என்ற யூகம் கூறியாகிவிட்டது, வீரம், தியாகம், கடமை, பக்தி என்று பல்வேறு உணர்ச்சி நரம்புகளை மீட்டி பார்த்தாகிவிட்டது. நந்தனாரை; திருப்பாணாழ்வாரை-மக்களுக்கு கவனப் படுத்தாகி விட்டது. 'ஆவுரித்துத் தின்று உழலும் புலையரேனும் அவர் கண்டீர்யாம் வணங்கும் தெய்வமா' என்று பாசுரம் பாடிப் பார்த்தாகிவிட்டது, வேறு நாடுகளிலே தேவையில்லாத தீங்கு தருவதான முறையை மாற்ற எடுத்துக்கொண்ட முயற்சியை விட, இங்கு நம் நாட்டில் தீண்டாமை ஒழிப்புக்காகவும், திருக்கோயில் திறப்புக்காகவும் எடுத்துக் கொண்ட முயற்சி மிக அதிகம். 'ஜாதி மதங்களை பாரோம்! உயர் ஜன்மம் இந்த தேசத்தில் எய்தினர் ஆயின், வேதியர் ஆயினும் ஒன்றே! அன்றி வேறு குலத்தவர் ஆயினும் ஒன்றே' என்ற பாடலை எத்தனை எத்தனையோ ஆயிரம் மேடைகளில் பாடி காட்டியாகிவிட்டது. வியாசரின் உண்மை கருத்து. பராசரரின் பரந்த நோக்கம் வேதத்தின் சாரம் உபநிஷத்தின் என்று தத்துவார்த்தங்கள், பேசிப் பார்த்தாகி விட்டது. எத்தனை மாநாடுகள்—எவ்வளவு அறிக்கைகள் — சத்தியாக்கிரகங்கள் — உண்ணாவிரதங்கள் கிளர்ச்சிகள் — இந்த மாசு துடைக்க ஏற்பட்டன ஏற்படட்டும் ... ஆம்! பெருமூச்சுடன்தான் பேசித் தீரவேண்டி யிருக்கிறது. மதுரை மீனாட்சி அம்மனை காணமுடியாது; அரங்கநாதரைச் சேவிக்க முடியாது. பழனியாண்டவரை பார்க்க முடியாது; திருமலையப்பனைத் தரிசிக்க முடியாது நந்தனுக்கு முக்தித் தந்த தில்லை சபேசன் பெருமையை நவரசங்களுடன் எடுத்துக் கூறுவாரேயின்றி அவரை காணமுடியாத பரிதாபம்! மக்களிடை காட்டிய பேத உணர்ச்சி, இன்று கடவுள்வரை சென்றுவிட்டது. காண அனுமதிக்கும் சாமி சில; காணக் கிடைக்காத கடவுள் சில என்னும் நிலைமை வந்துவிட்டது, ஏன்? யார் யாரைக் கேட்பது.

அறிவு, ஆண்மையைப் பார்த்துக் கேட்க வேண்டிய அவசியமான, அவசரமான கேள்வி இது. இடையிடையே, சில இடங்களில் சில கோயில்கள் திறந்து விடப்பட்டன, என்று செய்தி வெளிவரக் காண்கிறோம். ஆந்திர நாட்டவரும் சட்டசபை அங்கத்தினருமான பி. எஸ். மூர்த்தி, ஆதி திராவிடரை திருப்பதி மலைக்கு அழைத்துச் செல்லப்போவதாக அறிவிக்கிறார், வைதீகர்கள் எதிர்க்கத்தான் எண்ணுகிறார்கள். ஆனால், இன்று இந்த பழைய நாள் பரபரப்பும் பதைபதைப்பும் இல்லை ஆனால் பழைய நாட்டு கோட்பாடுகளின்படியே நடக்கவேண்டும் என்று எண்ணும் வைதீகர்களின் மனப்பான்மை அடியோடு மாறிவிட்டது என்று கூறிவிட முடியாது, திகைப்பு, திகில்; தடுத்தே தீரவேண்டுமென்ற போக்கு; இதனால் சர்வநாசம் சம்பவிக்குமோ என்ற சஞ்சலம்—இன்று குறைவு; குறைத்து கொண்டு வருகிறேன். ஆனால் அடியோடு மன மாறுதல் ஏற்பட்ட பிறகுதான், ஆலயப் பிரவேசம் சாத்தியமாகும் என்று கூறுவது ஆண்மை, அன்பு அறிவுடைமை ஆகாது. எனவே, சட்டம் தேவை; அதை விளக்க ஒரு பிரசாரத் திட்டம் தேவை—அவசரமாகத் தேவை.

ஆலயங்களில் முன்னாள் இன்னாள் நிலைமை; அதற்கு ஏற்படும் பலன்; யாருக்கு எந்தெந்த வகையான பலன் உண்டாகிறதா என்பவை தனிப் பிரச்னைகள், அதுபோலவே ஆதித் திராவிடர்கள் முன்னேற, ஈடேற வழி என்னென்ன வழி; ஆலய பிரவேசம் ஒன்றுமட்டும் அவர்களின் கஷ்டத்தைப் போக்கி விடுமோ என்பவையும் தனிப் பிரச்சினைகள், இப்போது நான் கூறுவது, அந்த தனிப் பிரச்சினைகளைப்பற்றி அல்ல. இந் நாட்டிலே ஆலயங்கள் உள்ளன. ஆதித் திராவிடர்களும் உள்ளனர். ஆலயங்களிலே நாம் போகலாம்; அவர்சள் வரக்கூடாது என்று கூறுகிறோம். நாமே யாரை ஆலயங்களுக்குள் வரக்கூடாது என்று தடுக்கிறோமோ அவர்களைத்தான் நாட்டுமக்களின் சகோதரர்கள், என்றும் கூறுகிறோம். நாட்டு மக்களின் கணக்கைப்பற்றி பெருமையாக 40 கோடி பேர் நாம் என்று பேசும்போது, கிட்டே வராதே, 'எட்டி நில்' என்று கூறித் தடுக்கிறோமோ, அவர்களின் தொகை 8 கோடி என்பதை மறந்தே விடுகிறோம். ஐந்தில் ஒரு பாகம் பஞ்சேரியத்தில் ஒன்று பழுதாகிவிட்டது போல்—நாட்டைக் கேட்டினில் ஆழ்த்துகிறோம். ஆலயங்களிலே பலவகையான சீர் திருத்தம் வேண்டும் என்று பேசுபவர்களேகூட, ஆதிதிராவிடர்கள் வருவதைத் தடுக்கிறார்கள்.

விழித்தெழு தமிழா!

விழித்தெழு தமிழா! இவ்வுலகம் - உன்
தொண்டினைக் காண விழைகிறது!
பழித்திடு மக்கள் அறிந்திடவே - உடன்
பைந்தமிழ்த் திறனைக் காட்டிவிடு!

மூடப் பழக்க வழக்கங்கள் - நின்
முடிவே முடிவெனக் காத்திருக்க
சாடும் வழியினை அமைத்துவிடு! - அதனால்
சாகாத் தமிழை வளர்த்துவிடு!

பழமை யினாலிங்கு சாகின்றார் - மக்கள்
பகுத்தறி வின்றி வாழ்கின்றார்;
வாழும் வழியினைத் தேடுகின்றார் - நல்ல
வாழ்க்கைப் பாதையைக் காட்டிவிடு!

பைந்தமிழ் காணா பழங்கதையைச் - சிலர்
பதமாய் இங்கு சேர்க்கின்றார்.
தீந்தமிழ் அறத்தை எடுத்துரைத்து - அவரைத்
தீயவர் எனவே உரைபடுத்து!

—பெத்தானூர் கவிஞர் மலர்வண்ணன்.

அண்ணலே! அறிஞரே! தானைத் தலைவா!

வாய்மணக்கச் செந்தமிழும் பேசி விட்டே
தாய்மண்ணும் தமிழ்மண்ணும் தவித்தே ஏங்க
சேய்தனையே பிரிந்துவிட்ட தாயே போலே
போய்விட்ட தேனேஎம் உயிரே அண்ணா!

முடிப்பதற்குள் கலைந்தவண்ண அழகே! அன்பே!
படிப்பதற்குள் பறிபோன பண்ணே! பாட்டே
விடிவதற்குள் விழ்ந்துவிட்ட விழியே! பூவே
பாடிவந்த தனித்தமிழே தலைவா! அண்ணா!

ஏடெல்லாம் போற்றிவந்த எழிலே! வாழ்வே!
நாடெல்லாம் காத்துவந்த தேவே! வேந்தே!
வீடெல்லாம் வீற்றிருந்த ஒளியே! தாயே!
காடெல்லாம் கழனிசெய்த கண்ணா அண்ணா!

ஆடிக்காற் றில்விளக்கே! அணைந்தே விட்டாய்
ஓடிவந்த சாவிடிக்கு மலையே! சாய்ந்தாய்
மூடிவந்த இருட்கூட்டில் கதிரே! வீழ்ந்தாய்
தேடிவந்த கூற்றிற்கே பலியோ அண்ணா!

பூஅழவே பொழுதழவே புவியும் தானே
மதிஅழவே மான்அழவே மயிலும் தானே
விதிஅழவே மான்அழவே காணும் தானே
நாஅழவே நாடழவே செய்தாய் அண்ணா!

— கு. மாதவிமணாளன்.

அதுபோலவே ஆதித் திராவிடர்களுக்குக் கல்வி. சுகாதார வசதி செய்து தரவேண்டும் என்று அன்புடன் பேசத் தயாராக இருப்பவர்கள்கூட, அவர்களுக்கு கோயில் பிரவேசம் கூடாது என்று பேசுகின்றனர். இந்த விசித்திர மனப்பான்மைக்கு காரணம் இருக்கிறது அர்த்தமற்றதல்ல இந்த போக்கு, உபகாரம் செய்ய சம்மதிக்கிறார்கள்—உரிமையைத் தருவதுகஷ்டம், உபகாரம் செய்வதிலே காட்ட வேண்டிய தியாக உணர்ச்சி குறைவு – தீரமும் குறைவு தான்—ஆனால் உரிமையை தருவதற்கு தியாக உணர்ச்சியும், தீரமும் அதிகமாகத் தேவை, உபகாரத்தை பெறுபவருக்கும், தருபவருக்கும் இடையே ஏறத்தாழ அடிமை—எஜமானன் என்ற நிலைமை தான் இருக்கும் உரிமை தருவது; பெறுவது என்பது இந்த நிலையைஅல்ல, இருவருக்கும் சமநிலை அந்தஸ்து ஏற்படச் செய்கிறது. உபகாரம் 'ஐயோ பாவம்' என்ற உணர்ச்சியின் விளைவு உரிமை ஏன், என்ற முழக்கத்தின் விளைவு, எனவேதான் சம்மதிப்பதில்லை, தீண்டாமை முறை உரிமையை பறிக்கும் சூது, தீண்டாமை எவ்வளவு வேதனையான வேடிக்கை இது என்பதனை எண்ணிப் பார்க்க வேண்டும், கெட்ட பொருளைக் தொடக்கூடாது...குப்பை கூளம், நாற்றப் பொருள் ஆகியவைகளிடம் நிச்சயமாகத் தீண்டாமை அனுஷ்டிக்கத்தான்வேண்டும் அக்கினித்திராவகம், வெடிக்குண்டு, விஷம். சிறுநாகம், கொட்டும் தேள் இன்னும் பலப்பல உண்டு ஆபத்து தரக்கூடியவை, அவைகளைத் தீண்டாதிருக்க வேண்டும்-அது நியாயம், ஆனால் பலகோடி மக்களை தாய்நாட்டாரை முதாதையர் கால முதற்கொண்டு நம்முடன் வாழ்ந்து வருபவர்களைத 'தீண்டமாட்டேன்'-என்று கூறுவது— தீண்டாமையை அனுஷ்டிப்பது எவ்வளவு வேதனை? எவ்வளவு அர்த்த மற்றது என்பதை எண்ணிப் பார்க்கும் எவரும் 'இனியும் அந்த கொடுமை இருக்கவேண்டும்' என்று வாதாட முடியாது-தீண்டாமையால் ஏராளமான கேடுகள் விளைந்திருப்பதை கூட்ட முடியும் விவரமாகக்கூட விளக்க வேண்டிய தில்லை எட்டுகோடிபேர் உள்ளார் தீண்டாதார் அவ்வளவு பேர்களுக்குப் மனப்புண் உண்டாக்குகிறோம்.

இதைவிட வேறு கேடு என்னவேண்டும். தயை, தர்மம். அன்பு, நேசம் முதலிய பண்புகள், நாட்டு மக்களிடம் வளரவேண்டும். அதுதான் அவர்கள் நாகரிக வாழ்வு வாழ்கிறார்கள் என்பதற்கு அடையாளம் என்றெல்லாம் அறிஞர்கள் கூறக் கேட்டு அகமகிழ்கிறோம். வடலூர் இராமலிங்கரின் சமரச சுத்த சன்மார்க்கத்தை வாழ்த்துகிறோம். இராஜா ராம்மோகன்ராய், தயானந்தர் ஆகியோருக்கு விழா நடத்துகிறோம். நம்முடைய நாட்களிலேயே ஹரிஜன் நிதிக்கு பணம்கூட தருகிறோம். ஆனால். தீண்டாமையை அறவே ஒழிக்கவேண்டும் வாரீர்' என்று அழைத்தால், தர்மம். தயை, அன்பு, நட்பு முதலிய குணங்களெல்லாம், ஒட்டுக்குள் மறைந்துகொள்ளும் ஆமைகளாகி விடுகின்றன. எங்கிருந்தோ கிளம்பி, வைதிகம் எனும் நாகம் சீறுகிறது. அதை அடக்க அறிவாயுதம் வேண்டும். கள்ள கையொப்பக்காரன் கரம் கூப்புகிறான்—விபசாரி விசேஷ அபிஷேகம் செய்கிறான். கொள்ளை லாபம் அடித்தவன் வெள்ளை ரிஷபம் செய்துவைக்கிறான். ஒழுக்க குறைவு உள்ளோர், அழுக்கு மனம் படைத்தோர். இழுக்கான வழி செல்பவர்கள் ஆலயங்களிலே நுழையவிடாதபடி தடை உண்டோ? இல்லை. ஆனால் ஆதி திராவிடரை மட்டும், ஆலயத்துக்கு வரக்கூடாது என்று தடுக்கிறோம்—நியாயமோ? அல்ல என்றுதான் தெரிகிறது. ஆனால்......என்றுதானே பதில் கூறுகிறீர்கள். ஆனால், ஆனால் என்று அநேக காலமாக கூறி வந்தாகிவிட்டது! நண்பர்களே! ஆனால் என்பதை மறந்து ஆகையால் தீண்டாமை கூடாது ஆலய பிரவேசம் அவசியம்தான் என்று அச்சத்தைவிட்டு தீர்ப்பளியுங்கள். ஆனால்... என்று நிகழ்ந்த நிலையிலேதான் மக்கள் பேசுகிறார்கள். அதற்கு அர்த்தம் கோவிலுக்குள் தீண்டாதாரை விடக்கூடாது என்பதல்ல. ஆனால் சர்க்கார் சட்டம் செய்துவிட்டோம் என்றுதான் மக்கள் கூறுகிறார்கள் என்று, சர்க்கார் தேவைப்படாத அளவு பண்படவில்லை. ஆனால் அத்தகைய சட்டம் வருவதைத் தடுத்தே ஆகவேண்டும் என்ற மனநிலை இல்லை. இந்த சமயந்தான் கோயில் நுழைவுக்கான சட்டம் செய்யும் சரியான சமயம். *

அண்ணா குறள்

(பேரறிஞர் அண்ணாவின் பொன்மொழிகள் சில குறள் வெண்பாக்களாக அமைக்கப்பட்டுள்ளன)

1. உலகுபோல் உன்னத நூலேதும் இல்லை
உலகே உயர்ந்தநூல் ஆம்.
2. கருத்தேதும் இல்லா கவின்மிகு பேச்சுக்கு
காகிதப்பூ மாலை நிகர்.
3. விளக்கின் பயனே ஒளியாம்! நிகழ்த்தும்
விழாவின் பயனே செயல்.
4. உழுவ தொருவனும்! உண்ப தொருவனும்!
ஒட்டுவோம் இத்தீமை யை.
5. பகுத்தறி வென்னும் மருந்தாலே தீர்ப்போம்
பழமையாம் வைதிக நோய்.

— காஞ்சி இரா. மைக்கேல்.

நகைச்சுவை நாடகம் - சபாபதி - திறனாய்வு

(புலவர். தி. நா. அறிவுஒளி)

(சென்ற இதழ்த் தொடர்ச்சி)

மாணிக்க :- ரொம்ப அழகாயிருக்குது! இந்த மாதிரி அர்த்தம் சொன்னா, அவனுக்குத் தமிழ் நன்னா வந்தூடும்!

ஆசிரியர் தன் மாணாக்கனாகிய ச. மு, 18 பக்கம் கட்டுரை எழுதியதைக் குறிப்பிடுகிறார். அக்கட்டுரையைப் படிக்கிறார்.

"இருப்புப் பாதை வியாசம்—இருப்புப் பாதை என்றால், இருப்புப் பாதை எனறு அர்த்தம்—"

மா. :- சரிதான், நீங்க அர்த்தம் சொல்லிக் கொடுக்கிற மாதிரிதான் அவனும் எழுதரான் — அப்புறம்.

சி. :- "மட்ராசில் சௌத் இண்டியன் றெயில்வே, மட்ராஸ் றெயில்வே என்று, ரெண்டு றெயில்வேக்களிருக்கின்றன.

மா. :- *என்னா ஐயா இது தமிழா? — அப்புறம் படிங்க!

சி. :- சௌத் இண்டியன் றெயில்வே மட்ராசிலிருந்து புறப்பட்டு குப் குப் குப் குப்!—குப் குப்—குப்" அப்பேன்! இது என்னா அப்பேன்?...

ச. மு. :- உங்களுக்கு சரியா படிக்கத் தெரியலே வாத்தியார் — நான் படிக்கிறேன் பாருங்க.
(படிக்கிறான்)
"சௌத் இண்டியன் றெயில்வே. மட்ராசிலிருந்து புறப்பட்டு, குப் குப் குப் குப் குப் குப்

சி. :- அப்பேன், என்னாப் பேன் இந்த குப் குப்?

ச. மு. :- பொகை போறது.

சி. ஓ. :- எவ்வளவு தூரம் போவுது?

ச. மு. :- செங்கல்பட்டு வரைக்கும்.

சி. :- என்னா! இந்த—குப் குப் செங்கல்பட்டு வரைக்குமா போவுது?

ச. மு. :- இல்லாப் போனா றெயில் நின்னு பூடாதா?

மா. :- பாத்தைங்களா வியாசம் எழுதின அழகை?

சி. :- (பக்கங்களைத் திருப்பிப் பார்த்து) அப்பேன், அந்த குப் குப் தவிர, வேறென்னமானா எழுதி இருக்கரையா?

ச. மு. :- எழுதியிருக்கிறேன் சாமி.

மா. :- எழுதியிருக்கரான்! — அத்தையும் படிக்கச் சொல்லுங்க.

சி. :- அதெ படியப்பேன்.

ஏழு பக்கங்கள் 'குப் குப்' எழுதியிருக்கிறான்; அதையெல்லாம் புரட்டியபின், ச. மு. "செங்கல் பட்டைக் கடந்து போகும்போது பாலாறு பிரிட்ஜ் (Bridge) வரும்போது அதன் பேரில் கட கட கட கட கட கட வென்றும், பட பட பட பட பட பட வென்றும், கட கட பட பட பட பட கட கட, பட பட கட கட, கட கட பட பட, பட பட கட கட.

சி. :- உம்—இந்த கட கட, பட பட எவ்வளவு?

ச. மு. :- பிரிட்ஜ் தாண்டர வரைக்கும்.

சி. :- இல்லெ எத்தினி பக்கம் எழுதி யிருக்கரெ இன்னு கேட்டேன்—

ச. மு. வைப் பிள்ளை பார்க்க அவனுடைய வருங்கால மாமி தெய்வயானை வருகிறாள். தாய் திரிபுரம் பிள்ளையைப் படிக்கச்சொல்கிறாள். சபாபதியைத் தன் தந்தையின் நூலகத்தினின்றும் (Encyclo paldia Britanica Indica!) புத்தகத்தை எடுத்து வரச் செய்து படிப்பதுபோல நடிக்கிறான். மாமி 'செய்தித் தாள் படிக்கிறானா?' என்று கேட்டதும் ஆங்கிலச் செய்தித் தாளை எடுத்து வரச் செய்து வரைகணக்குச் செய்முறையை—முன்னே மனப்பாடம் செய்தது—ஒப்பிக்கிறான். தமிழில் மண்ணெண்ணெய் விலையேற்றம், மக்கள் படும் தொல்லை, அரசினரின் ஆறுதல் வழி பற்றி மொழி பெயர்த்துக் கூறி ச. மு. ஏமாற்றுகிறான்.

இந்த இடத்தில் சபாபதி ஓர் ஐயம் கேட்கிறான். அது கருதத்தக்கது.

ச. :- "என்னாப்பா அது, இங்கில்சுலே இவ்வளவுண்டு சொன்னெ, தமுழ்லே அதுக்கு இவ்வளவு பெருசா அர்த்தம் சொல்ரையே?

ச. மு. :- இங்கிலீஷ் இன்னா அப்படித்தான்."

—ஆங்கிலத்தின் உயர்வைப் பற்றியும், தமிழின் ஆற்றல் குறைவைப் பற்றியும் அழுந்திய நம்பிக்கையுடையவர்களைப் பம்மலார் நளாக நகையாடுகிறார். ஆங்கிலம் ஏதோ வியக்கத்தக்க செறிவுடைய மொழி என்றும், அத்திறன் தமிழ் மொழிக் கில்லை யென்றும் உளறுவதை எள்ளிச் சிரிக்கிறார் நாடகாசிரியர்!

இந்தவகையில் முதற் காட்சி முடிகிறது.

முதற் காட்சியிலேயே தம் நாடக மாந்தரின் பண்பு நலங்களை—தம் குறிக்கோள்களை — இயல்புகளைத் தெள்ளத் தெளியத் தீட்டிவிட்டார்!

———

* இந்த இடத்தில் கலப்புத் தமிழ் நடையை விரும்புவோரை மிக்க ஆற்றலொடு பம்மலார் எள்ளி நகையாடுகிறார். இவருடைய நடையிலும் கலப்பு மிகுதியே என்பதை மறப்பதற்கில்லை ஆயின், பம்மலார் தூய தமிழ் நடையைக் கொள்கையளவில் ஏற்றுப் போற்றுகிறார். அவர் நாடகம் எழுதியமையால், பேச்சு முறைக்கே முதன்மை தர நேர்ந்தது. அன்றைய குமுகாயச் சூழலில் அவர் சிக்கியமையால் வந்த நிலையக்து. ஆயின், பிழையற்ற தூய தமிழ் நடையே சிறந்ததென நாடகத் தந்தையவர்கள் கருதியமையை நாட் தெளிவாக உணர வேண்டும்.

[ச. மு. - வைப் பார்க்க அவன் மாமனும் மைத்துனனும் வருகின்றனர்.]

ச. மு. ;- அடே சபாபதி, சீக்கிரம் ஒரு சோடா புட்டியெ ஒடச்சி கொண்டா.

ச. ;- ஏ!—அது கெட்டு பூடும்பா அப்புறம்.

ச. மு. :- அதனப் பிரசங்கிக் கழுதை! சொன்னபடி செய்முன்னே. குறுக்கே குறுக்கே பேசிகினு!

ச. :- இப்பவே சொன்னேம்பா! அப்புறம் எம்மேலே கோவிச்சிகினு பாரு! என்று சொல்லிவிட்டுச் செல்லும் சபாபதி. 'சோடா புட்டி'யைத் தூள் தூளாக உடைத்து ஒரு தட்டில் வைத்துக் கொண்டு வருகிறான்.

ச. :- பாத்தையா அப்பா! அப்பவே சொன்னேனே புட்டியை ஒடெச்சா கெட்டுபூடும் இன்னு! ஒடெச்ச உடனே தண்ணியெல்லாம் புஸ் இன்னு பூட்டுதப்பா!

ச. மு. :- வாட் நான்சென்ஸ் (What Nonsense) உன்னை யார் புட்டியெ ஒடெக்கச் சொன்னது?

ச. :- நீதானே அப்பா சொன்னே? அப்பவே நானு வேணும் இன்னனே.

ச. மு. :- தெறந்து கொண்டுவாடா இன்னு!

ச. :- தெறக்கரதா? எப்படியப்பா? நீ சாவி கொடுத்தேயா?

—இப்பகுதியில் மக்கள் பேச்சு வழக்கில் பிழையோடுகூடிய சொல்லாட்சிகள் பெருகி வருவதை நையாண்டி செய்து திருத்துகிறார் நாடகாசிரியர். வினைச் சொற்களைப் பேச்சில் தக்க முறையில் பயன்படுத்தாமல் சோர்ந்தால், விளைவுகள் விரும்பத்தகாதவையாக இருக்கும் என்பதை எவ்வளவு அழகாக நாடகப் பண்போடு காட்டியுள்ளார் நாடகப் பேராசிரியர்! இப்பகுதியைப் படித்து—பார்த்து—எல்லா மக்களும் அவர்களின் அறியாமைக்கு இரங்கி வாய்விட்டு நகைப்பர்! ஆயின், இதே பிழைகளை யும், பிழையாக உணர்வதையும் தாமும் செய்கிறோம் என்பதை எல்லாரும் உணர வேண்டும்:

அடுத்த பகுதியில் இசைப் பெட்டியை இயக்க ச. மு. முற்படுகிறான். ச, அதை முன்னுள் துடைத்திருக்கிறான் அதன் விளைவாக இசைப் பெட்டி பாடவில்லை. ச. மு.; - சவை மருட்டு கிறான்.

ச. :- இல்லெ அப்பா! நெஜத்தே சொல்லிடரேன், நேத்து நீ சொன்னையா ஊசியினுலெ கோடு பண்ணி யிருக்கிரத் தொட்டுதான் பாடுது இன்னு, அத்தெ பார்கனும் இன்னு, ஒரு குண்டூசி எடுத்து கோடு கிழிச்சிகினெ வந்தெ! ஒரண்டெ பொத்தலா போச்சிப்பா கொஞ்சம் அவ்வளதாம்பா.

ச. மு. :- பொத்தலா பண்ணிவுட்டெ!

ச. ;- இல்லெ அப்பா! அத்தெ ஒடனே கொஞ்சம், சாதம் போட்டு ஒட்டிவிடரேம்பா நீ கோவிச் சிக்காதேப்பா!

ச. மு. :- டாம் டர்ட்டி பூல் (damn dirty fool!) உன்னெ டிஸ்மிஸ் (dis miss) பண்ணிவிட்டேன்! போ வெளியே. (சபாபதி போகிறான்) இல் லெங்கோ! இதெல்லாம் ரொம்ப காஸ்ட்லி ஸ்லேட்சு (costly slides) ங்கொ, ஒவ்வொண்ணு, ஆப் பாஸ்டு திரீ கோர்டர் பாஸ்ட் பைவ் ருபீஸ் (half past three quarter past five rupees) ஆகு துங்க!

இப்பகுதியில் பேதைமையும் மடமையும் முட்டி மோதி வெள்ளமாகப் பாய்ந்து நகைச்சுவை விளை விப்பதைக் காண்கிறோம்.

ச. மு. தேர்வில் தோல்வியடைகிறான். சபாபதி, 'ஏம்பா, பரிட்செ ஆச்சாப்பா உனக்கு?' என்று கேட்க, ச. மு. "பரிட்செ யெல்லாம்—பனல் ஆச்சு!" என்று சொல்கிறான், அதன் பொருளறியாத சபாபதி, "அப்பா! சந்தோஷமாச்சப்பா! நானு இப்பவெ சொல்லிவுட்டேன், இந்த மாதம் மொதலு எனக்கு ஒரு ரூபா சம்பளம் ஒஸ்தனும்" என்று கேட்கிறான்!

உடனே ச. மு.-வும் ச-வும் ஒரு திட்டம் தீட்டுகின்றனர்.

ச. மு, சபாபதியை பாதாம் அல்வாவும் பகோடாவும் வாங்கிவரச் சொல்கிறான்; அவன் வாங்கி வந்ததும் ஒளித்து வைக்கிறான். தன் தாய் வரும்போது சபாபதி 'அப்பா, தூக்கு போட்டுகது' என்று கத்தும்படி ஏற்பாடு செய்கிறான். அதன்படி சபாபதி கத்துகிறான்.

திரி :- மகனே! மகனே! வேண்டாண்டா, வேண்டாண்டா. (கையைப் பிடித்துத் தடுக்கிறாள்)

ச. மு :- (திமிறிக் கொள்வதுபோல் பாசாங்கு செய்து) அதெல்லாம் முடியாது! அதெல்லாம் முடியாது! பரீட்செ பெயில் ஆன பிற்பாடு நானு பொழச் சிருக்க மாட்டெ! பொழச்சிருக்க மாட்டெ! நான் செத்துபூடரேன்; செத்துபூடரேன்!

ச :- அப்பப்பா! அந்த பாதுமல்வா எங்கெ வைச் சிருக்கெ? அத்தெ சொல்லிட்டு செத்துபூடப்பா! அத்தெ முன்னெ சொல்லிவுடப்பா!

—இந்த இடத்தில் ச. மு. - வின் ஊழல் உடைப்பெடுத்துக் கொள்ள, நாம் தாங்கவியலாது நகைக்கிறோம். போலியின் புனைவு கலைவதையும், கள்ளமறியா மடமை அதைக் காட்டிக் கொடுப்பதையும் உணர்ந்து சுவைக்கிறோம்.

ச. மு. தன் தாயிடம் மீண்டும் தேர்வு எழுத அவனை வற்புறுத்துவதில்லை என்று உறுதிமொழி பெற்றபின், தற்கொலை முயற்சியைக் கைவிடுகிறான். இதனோடு இரண்டாம் காட்சி முடிகிறது!

மூன்றும் காட்சியில் ச. மு.-வின் போலித் தன்மையின் வேட்கையை ஆசிரியர் சிறப்பாக உணர்த்தியிருக்கிறார். தேர்வில் தோல்வியுற்ற ச. மு. வெற்றி பெற்றதாகச் செய்தி பரப்பி. விருந்து, இசையரங்கெல்லாம் நடத்தியபின் வேறொரு சபாபதி வெற்றி பெற்றதாகச் செய்தியறிந்து ஏமாந்து போகிறான்! இறுதியில் ச. மு. - வும், ச. - வும் பேசுகின்றனர். கேட்போம் :

ச :- ஆமாம்பா — இத்தெ யெல்லாம் நெனைச்சிகினு எனக்கே சிரிப்பா யிருக்குதுப்பா-ஏம்பா, இத்தெ யெல்லாம் ஒரு நாடகமா போட்டா நண்ணு யிருக்காதப்பா!

ச. மு :- அப்படிதான் எனக்கும் தோணுது-நீ போயி சீக்கிரம் பாக் (pack) பண்ணு.

ச :- (கொஞ்சதூரம் போய் திரும்பி வந்து) ஏம்பா, அப்படி போட்டா அதுக்கு என்னுப்பா பேர் வைப்பே?

ச. மு :- எம்பேர் தான் வைக்கலாமின்னு யோசிக்கிறேன்.

ச :- ஏம்பா, எம்பேர் கொஞ்சம் வையேம்பா?

ச. மு : சத்! நான்சென்ஸ் (nonsense) அதெல்லாம் ஒதவாது எம்பேர் தான் வைக்கனும்.

ச :- ஆனு—சபாபதி இண்ணு வை அப்பா, யாரு எப்படி ஒணுமிண்ணலும் நெனைச்சிகட்டும்பா (போகிறுன்.)

ச. மு :- அவன் சொல்ரதும் ஒரு யுக்திதான்—என்று முதற்பகுதி முடிந்தது.

சபாபதி நாடகம் மடமையைக்காட்டி அறிவுடைமையை யூட்டி நகை விருந்து நல்குகிறது!

---

*"பொங்கல் பண்டிகை" அல்லது "சபாபதி"

(இரண்டாம் பாகம்)

ச. மு. மாமியார் வீட்டில் பொங்கல் விருந்துண்ணச் செல்கிறுன். வழியில் ஆவடியில் ஒரு சத்திரத்தில் இரவுப் பொழுதில் தங்குகிறுன். சத்திரப் பொறுப்பாளர் விசுவநாத ஐயர் உணவு படைத்துப் பின், அதுபற்றிக் கருத்து கேட்க, ச. மு. பாராட்டி விட்டு, சபாபதியின் கருத்தை வினவுகிறுன். சபாபதி, "அல்லாம் நண்ணுயிருந்துது அப்பா, ஒண்ணுதான் கொஞ்சம் வேகாதெ யிருந்துதப்பா" என்றுன்.

ச. மு:- அதென்னடா அது? என்ன வேகாதெ யிருந்தது?

ச:- சாதத்துலே யிருந்துதே கல்லு, அது வேகவே யில்லெப்பா, எவ்வளவோ கடிச்சிப் பாத்தேன்."
—எப்படி சம்பந்தரின் நகைச்சுவை வெடி!
உடனே ஐயர் வருத்தம் தெரிவிக்கிருர்.

ச. மு:- நெவர்மைன்ட்! (nevermind) பரவாயில்லே, அதனுலே ஒண்ணும் தப்பில்லே. இவன் படிக்காத முட்டாளுங்கோ! அதாம் அப்படி அத்தெ யெடுத்துச் சொன்னுன்.

ச:- ஏம்பா! படிப்புக்கும் இதுக்கும் என்னுப்பா சம்பந்தம்? இருந்ததெ எடுத்து சொன்னு— சும்மா கோவிச்சிக்கரையே—

ச. மு:- அடே அதனப் பிரசங்கி! வாயை மூடு— ஆத்திச்சூடி படிச்சிருக்கராயாடாநீ?

ச:- படிச்சேம்பா—சின்னபோது.

ச. மு:- அதுலே 'இளமையிற்கல்!' இண்ணு இருக்குதே, அதுக்கு அர்த்தம் தெரியுமா?

ச:- அதெல்லாம் எனக்கு காபகம் இல்லேப்பா, அத்தெ அப்பவே வாத்தியாருக்கு ஒப்பிச்சூட்டேம்பா!

ச. மு:- ஸ்டுபிட் சாப்! (stupid chap) இளமையிற்கல் இண்ணு, இளமையிலே கல் சாப்பிடணும், இண்ணு சொல்லியிருக்குது, ஆகையினுலே அதெல்லாம் தப்புண்ணு சொல்லக் கூடாது......

—எப்படி ஆத்திசூடி ஆராய்ச்சி! அரை குறைப் படிப்பும், மனம்போன போக்கு ஆய்வும் எவ்வெவ்வாறு நடைபெறும் என்று எள்ளி நகையாடுகிருர் நாடகாசிரியர் இப்பகுதியில்!

மணியடிக்கும் சிறு கடியாரத்தை ச. மு. எடுத்துவரச் சொல்கிறுன். அது அவனை நான்கு மணிக்கு எழுப்பும் என்று கூறுகிறுன்.

ச:- இதுவா எழுப்பும்?—என்னுப்பா. உன்னெப் போலே என்னேயும் முட்டாள் இண்ணு நெனச்சிக்கினேயா?

—கதைத் தலைவனும், பணியாளனும் ஒருவரை ஒருவர் 'முட்டாள்' என்றும் 'மடயன்' என்றும் ஏசிக் கொள்கின்றனர் வேருெரு நிலையில் 'உனக்கும் கொஞ்சம் அறிவிருக்கிறது!' என்று பாராட்டியும் பேசுகின்றனர்.

சமயத் தலைவர்கள், கட்சித் தலைவர்— தொண்டர்கள், இரு கொள்கையிடைப் பட்டோர், தமக்குச் சார்பினரைப் பாராட்டியும், தமக்கு மாற்றணியினரை அறிவற்ருேர் என்று பழித்தும் பேசும் உலகியலை மறைமுகமாகச் சுட்டிக்காட்டி யிடிப்பதுபோல இக்காட்சி யமைந்துள்ளதாக நான் கருதுகிறேன்.

நம் நாட்டில் சாதி — இன — குல —'வெறி யாட்டம் இடைக்காலத்தில் அளவுகடந்திருந்தது. நாடகாசிரியர் காலத்திலும் அதன் வெறி தணிந்தில்லை. 'உயர்ந்த குலத்தோர்(?) பிறரைத் தீண்டாதாராக்கி வைத்திருந்த கொடிய மடமையைக் கடுமையாகத் தாக்கி எள்ளி நகையாட நாடகக் காட்சியினிடையிலே ஒரு சீர்திருத்தத் தீப்பொறியைத் தெறிக்கவிட்டிருக்கிருர் சம்பந்தர்.

இருண்ட சத்திரத்தின் ஓர் உட்புறத்தின் மேல் ஓர் பலகை இருக்கிறது. அதில் ஏதோ எழுதப்பட்டிருக்கிறது. ச. மு. அது என்ன என்று பார்க்க விளக்கை எடுத்துவரச் சொல்கிறுன். விளக்கு வருகிறது; படிக்கிறுன்.

---

* நாடக உறுப்பினர்; ச. மு. ச. கிருஷ்ணசாமி—(ச. மு.வின் மைத்துனன்) விசுவநாத ஐயர்—ஆவடி சத்திரத்துப் பிராம்மணன், தினகரசாமி நாயுடு, ஓர் சமீந்தார், ராமன், கிருட்டிணசாமியின் பணியாள், பெல்லியப்ப கவுண்டன், குப்பையர், அமிர்தலிங்க சோசியர், சிதம்பரத்தடிகள், வெற்றிவேற் கவிராயர், குப்புசாமி முதலியார், ராம்சி.

கதை நிகழிடம் : ஆவடியில் ஒரு சத்திரம், கோனப்பஞ்சேரியில் ச. மு. வின் மாமனுர் வீடு.

"விஸ்வநாதையர் சத்திரம்—பிராம்மணர்—'கள்' சாப்பிடுமிடம்! — வாட் நான்சென்ஸ் (what nonsens) பிராம்மணர் கள் சாப்பிடு மிடத்திலேயா நம்பளுக்குச் சாப்பாடு போட்டாங்க!—நான் போயி அந்த பாப்பானே கேக்கரேன்!"

இடைக்காலத்தில் சிற்றுண்டி விடுதி, கோவில், சத்திரம், விழா இங்கெல்லாம் மேலினம் என்று கூறிக்கொண்டவர்க்குச் சாப்பிடும் இடம் தனியாக ஒதுக்கப்பட்டிருந்தது. அங்கே பார்ப்பனர் அல்லாதார் நுழையவுங் கூடாது; எதையும் தொடவுங்கூடாது; சாப்பிடவுங் கூடாது. இந்த இழிநிலையைக் கடுமையாக எள்ளி நகையாடியுள்ளார் பம்மலார்!

அறவுரைகளை நாடகத்தில் கலை நயத்தோடு எவ்வாறு சொல்ல வேண்டுமென்பதற்கு ஒரு நல்ல சான்று இஃது.

ச. மு. சிரிக்கிறான். ச. அதைப் பாராட்டு கிறான்.

ச:- அப்படிதான் சிரியப்பா, நீ சிரிச்சாகா தான் உம் மூஞ்சி அழகாயிருக்குதப்பா—கோவிச்சிக்காதே அப்பா.

ச. மு:- கோவிச்சிகனு என்னமாடா இருக்குது?

ச:- உம்—அப்புறம் நானு சொன்னு நீ கோவிச் சிக்கக் கூடாது.

ச. மு:- இல்லே சொல்.

ச:- நீ கோவிச்சிக்கனுகா — கொரங்காட்ட இருக்குதப்பா உம் மூஞ்சி!

ச. மு;- (சிரித்து) ஏண்டா, அதனெப் பிரசங்கி!—ஆனாலும் நீ சொல்ரது என்னமோ கொஞ்சம் வாஸ்தவந்தான்.

ச:- கொஞ்சம் என்னுப்பா—நீ இனிமேலே எப்ப வானு கோவிச்சிக்கனு! ஒரு கண்ணாடி எடுத்து காட்ரேன்—அப்போ என்னமா இருக்குது பாரப்பா!

வாழ்க்கையைச் சினம் அழகற்றதாக ஆக்கி விடுகிறது; சினம்தான் சேர்ந்தாரைக் கொல்லும் தன்மையது. இதற்கெதிர்மாறாக சிரிப்பும் நகைச்சுவையும் வாழ்வின் இனிமையை வளர்க்கிறது; பற்றுண்டாக்குகிறது, ஆர்வ ஊக்கத்தைத் தூண்டுகிறது; அழகை ஒளியோடு பொலியச் செய்கிறது! என்ற உண்மையை நாடக நயத்தோடு உணர்த்தியுள்ளார்.

சத்திரத்துத் திண்ணையில் உறங்கவேண்டிய நிலையில் ச. மு, கள்வர் அச்சத்திற்காக சபாபதியை விழித்திருக்குமாறு கூறுகிறான். "படுத்துக்கொண்டால் தூக்கம் வருமே அப்பா!" என்று ச, கூறுகிறான். அதற்கு ச. மு. 'ஒரு துன்பமான செய்தியைப்பற்றி எண்ணினால் தூக்கம் வராது' என்றான். என்ன எண்ணு கிறான் தெரியுமா, ச.?

"வானத்தில் மொத்தம் எத்தனை விண்மீன்கள் இருக்கும்?"—என்பதே! சற்று நேரத்தில் முகில் விண்மீனைக் கடக்கவே அவை மறைந்தன. உறங்கும் ச. மு. வை, ச. எழுப்பி, 'அப்பா, நான் எண்ணிகினு வந்தா, இந்த மேகங்க வந்து மறைச்சூடுதப்பா! திருட்டு நட்சத்திரங்க'பா! எங்கே நானு சரியா எண்ணி உடரேனோ இன்னு மறைச்சிகிதுங்கப்பா! அதோ பாரு!

வண்ணமிகு படைப்புகள்

வர்ணமய உலகம்

அதுவே கோ-ஆப்டெக்ஸ் உள்ளடக்கம்

பட்டுகள் பிரமாதம்

நெசவோ நெஞ்சையள்ளும்

குர்தாக்கள்

பெல் பாட்டம்கள்

லுங்கிகள்

சேலைகள்

உங்கள் உள்ளம் ஏங்கும் சிருஷ்டிகள்

கோ-ஆப்டெக்ஸ் படைப்புகள்

கோ-ஆப்டெக்ஸ்

காலப்போக்கிற்கு ஏற்ற
வர்ணஜால ஆடைகள்...

கோ-ஆப்டெக்ஸ்
சகாயமான விலை...

ஆதாயமான உழைப்பு

தமிழ்நாடு
கைத்தறி நெசவாளர்
கூட்டுறவு சங்கம் லிட்.

பாலசுந்தரம் பில்டிங்ஸ்

எழும்பூர் : சென்னை-8

திரும்பியும் மறைச்சிகிது; நான் சொல்விடரேன் அப்பாகிட்ட!......'இந்த மப்புங்களெயெல்லாம் மறைச்சிக்கத்தேவலெ இன்னு சொல்லப்பா— நானு எண்ணிகினே வந்தா நடுப்பலே வந்து மறைச்சிகிதப்பா!

ச. மு:- மப்புங்களே மறைச்சிக்கத் தேவலெ இன்னு நானு என்னமாடா சொல்ரது? அதெல்லாம் முடியாது போ.

இதனல் வானத்து விண்மீன்களை எண்ண முடியாது என்று ச. மறுத்து விடுகிறுன்!

அடுத்த எண்ணச் சிக்கல் என்ன தெரியுமா? இதுதான்:

ச: 'நம்ப பட்டணத்தும் பக்கத்லெ ஒரு சமுத்திரம் வெட்டனுங்களே அந்த மண்ணெல்லாம் எங்கே போட்டாங்க? இன்னு' எண்ணுகிறுன்!

இந்த நிலையில் சவும் ச.மு. வும் சேர்ந்தே உறங்கி விட, கிருட்டினசாமியும் விசுவநாத ஐயரும் வந்து ஒரு நகைச்சுவை செய்து செல்கின்றனர். திடுமென

ச.- விழித்துக் கொள்கிறுன்; ச. மு. வும் விழித்து விளிக்கிறுன்.

ச. நீ பயப்படாதேப்பா-இனிமேலே-எனக்குத் தூக்கம் வராதப்பா.

ச. மு:- ஏன்? அந்த சமுத்திர மணலெ எங்கே போட்டாங்க இன்னு கண்டு பிடிச்சையா?

ச:- அது அப்பவே கண்டுபிடிச்சூட்டோம்பா-இப்போ வேறே ஒரு பெரிய யோசனெ பண்ரே.

ச. மு:- அதென்னமடா கண்டு பிடிச்சே? எங்கெ போட்டாங்க அந்தமணலெ எல்லாம் தெரியுமா?

ச.- அந்த பெரிய சமுத்திரம் வெட்டன மணலெ, எங்கே போட்டிருப்பாங்கப்பா?—வெளியிலே போட்டா பெரிய மலையாட்டம் பூடாதா? அத் தொட்டு சந்த சமுத்திரத்துக்குக் கீழவெ போட்டிருக்கணும்பா!-

இந்நிலையில் யாரோ திருடர் வந்து பெட்டியில் இருந்த பொருள்களை எடுத்துச் சென்றதை கூறினன் ச. செய்தி சொல்லு முன்னே ச. மு. சினக்கக் கூடாது என்று உறுதி மொழி பெற்றுன் ச.

அவன் சூழ்ச்சி கண்டு. ச. மு சிரிக்கிறுன். உடனே ச. அவன் காலில் விழுந்து, "அப்பா! அப்பா! எனக்கு சம்பளம் ஒஸ்தரேண்ணேயேப்பா

ச. மு:- ஏண்டா! இப்போதான் அத்தெ கேக்க சமயமோ?

ச:- நேத்து கேட்டப்போ, நீதானே சொன்னேப்பா- இப்போ கேக்காதே-நானு எப்பவானு சந்தோஷமா சிரிச்சிகினுஇருக்கரப்பொ கேளுஇன்னு!-

ச. மு:- இப்பொ நானு சந்தோஷமாயிருக்கரனே?

ச:- இல்லேப்பா?- சிரிச்சயேப்பா?—

ச. மு:- சிரிக்காதே என்னு செய்ரது-உன்னெ கட்டிகினு அழரது! தூங்காதெ முழிச்சிக்கினு இர்ராண்ணு-தூங்கிவுட்டுதும் இல்லாதெ-

ச: நானு தூங்கக் கூடாதின்னு தாம் பாத்தேம்பா- என்னமாவோ தூக்கம் வந்துட்டதப்பா—



ச. மு. துப்பறியும் திறமையாளனுக மாறுகிறுன். மாமியார் வீட்டுக்கு ச. மு. வருகிறுன. அவன் மனைவி கிருட்டிணசாமியின் குறும்பு விளையாட்டை விளக்கி ஒரு மடல்-ஆங்கிலத்தில்-எழுதி விடுக்கிறுள். அதனல் உண்மையறிகிறுன் ச. மு. இறுதியில் ஒரு மரபுத் தொடருக்குப் பொருள் விளங்கவில்லை (You thus turn the tables.)

ச. மு:- இதுவே கடைசியிலெ என்னமோ எழுதியிருக்குது. அதுக்குதான் அர்த்தமாவலெ-யூதஸ்டர்ன் தி டே பில்ஸ் (You thus turn the tables) இன்னு என்னு அர்த்தம்?

ச:- என்னுப்பா- உனக்கு வெக்கமில்லேப்பா? பொண்சாதி எழுதன இங்கிலீஷ் அர்த்தமாவலெ இன்றையேப்பா? அதுக்குத்தான் அப்பவே நானு தலெப்பாடா அடிச்சிகினே, கொஞ்சம் கஷ்டப்பட்டு படியப்பா படியப்பா இன்னு.

ச. வைக் கண்டித்த ச. மு. மேசைகளைத் திருப்பித் தலைகீழாகப் போட்டு வைக்கிறுன். இது 'ஏன்?' என்று ச. கேட்கிறுன்.

ச. மு:- 'சொன்னபடி செய், முட்டாள்! நீ இங்கிலீஷ் படிக்காதத்துனலெ இவ்வளவு கெடுதி-வென் அட் ஹோம் டு ஆஸ் தி வைப் சேஸ் (When at home do as the wife says) அந்தப் பழமொழியைக் கேட்டிருக்கரையா நீ?

ச:- அப்படி இன்னு என்னு அர்த்தம் அப்பா?

ச. மு: மாமியார் வூட்லே இருக்கும்போது பெண்சாதி சொல்றபடி கேள், இன்னு அர்த்தம்!

இவ்வாறு செய்யும்போது சிறு புட்டியை ச. உடைக்கிறான்.

'அப்பாப்பா! புட்டி உடைஞ்சிபூட்டுதப்பா!' என்கிறான்.

ச.மு.: பரவாயில்லே, இதையெல்லாம் நாம் கவனிக்கக் கூடாதே. இதுக்கெல்லாம் அவ்வையார் நமக்கு உத்தரவு கொடுத்திருக்காக. "உடைவது விளம்பேல்" என்று சொல்லி யிருக்கராங்க. அத்தொட்டு உடைஞ்சதெ எடுத்து வெளியே போட்டுட்டு இம்முண்ணு இருந்துடு.

'ஆத்திசூடி' பாக்களைப் பிறழ உணர்ந்து தன் மனம்போன போக்கில் பொருள் கொண்டு, அதைப் பிறருக்கும் உணர்த்தும் ச. மு. இடைக் காலத்தில் அரைகுறை யறிவைக்கொண்டு இலக்கிய விளக்கம் செய்து அதனால் முரண்பட்ட கருத்துக்களைப் பரப்பியவர்களை எள்ளிநகையாடி யுள்ளார் ஆசிரியர்.

ச. மு. விடம் கிருட்டிணசாமி தோற்று ஒரு உருபாய் கொடுக்க, அவன் சபாபதியிடம் அவன் கேட்டதற்காகக் கொடுக்க, ச தோசை தின்னும் போட்டியில் தோற்றமைக்காகத் தன் பங்காளித் தம்பி தத்திராமனிடம் தர, அவன் செய்த தவறுக்கு கிருட்டிணசாமி ஒறுப்புப் பணமாகக் கேட்டதற்கு அந்த ஒரு உருபாவை இராமன் தருகிறான்.

கி.: சரி! கொடுத்த ரூபா வந்து சேந்து போச்சி!

ச.மு: வந்த இடத்துக்கு எல்லாம் போய்ச் சேரவேண்டியது தானேப்பேன் என்கிறான்.

அரிய மெய்யுணர்வுக்கொள்கையை விளையாட்டு போல மைந்த எள்ளல் - நகை - நாடகத்தில் எவ்வளவு பொருத்தமாக ஆண்டுள்ளார் ஆசிரியர்!

[இதனோடு முதற்காட்சி முடிகிறது.

இரண்டாம் காட்சி தொடர்கிறது.

இப்பகுதியில் ச.மு. மாமனாரைப் பொங்கற் பரிசு கேட்கத் தேடி வருபவரைத் தம் பேச்சுத் திறனால் ஏமாற்றித் திருப்பியனுப்பும் நிகழ்ச்சி நிறைந்த நையாண்டியோடு கூறப்படுகிறது.

இப்பகுதியில் நாம் பேசும்போது எவ்வளவு பொருளுணர்வு இல்லாமல் பேசுகிறோம் என்பதை எள்ளுகிறார் ஆசிரியர்.

ச.மு: என்ன சமாசாரம்?

பெல்லியப்பன்: ஒண்ணும் விசேஷமில்லெ— சும்மா பாத்துவுட்டு போகலாமின்னு வந்தேன்.

ச.மு: என்னையா?

பெ: ஆமாம்.

ச.மு; வேறொண்ணுமில்லையே?

பெ: வேறொண்ணுமில்லே.

ச.மு: ஆனா - நண்ணாப் பாத்துட்டுப் போங்க— (எழுந்திருந்து திரும்புகிறான்) நண்ணா பாத்தாச்சா? — போய்வாங்க—.

—இக்காட்சியை சிரிப்பூட்டுவதாக மட்டுமா அமைத்துள்ளார்? மக்கள் சொல்லின் பொருளுணர்வின்றி வழங்கும் கல்லா நிலையை யன்றோ கடிகின்றார்!

'நகைச்சுவை அறிவுறுத்து வதற்கமைந்த பயன் கருவியென' அன்றே உணர்ந்த பம்மல் சம்மந்தரின் பேரறிவுடைமையின் மாண்பை எவ்வளவு வேண்டுமாயினும் பாராட்டலாம்!

'அசட்டுத் தன்மை' எல்லா வகையான மக்களிடத்தும் ஏதோ ஒரு வகையில் அமைந்துள்ளது. நமக்குத் தெரியாமல் நம்மிடம் அறியாமைகள் ஒளி வீசிக் கொண்டிருக்கும். மக்களிடமுள்ள இத்தகு இயல்பை நையாண்டியோடு 'சபாபதி' நாடகத்தின் வாயிலாக நாடகாசிரியர் உணர்த்துகிறார்.

நகைச்சுவை என்று எழுத முற்பட்டு மூடமையையும், வீண் அரட்டைகளையும், கோமாளிக் கூத்தையும் சம்பந்தர் எழுதவில்லை. வாழ்க்கை நிகழ்ச்சிகளிலிருந்தே நகைச்சுவையை வடித்துள்ளார். கதைப் பின்னலோ, சிக்கலோ இல்லாத நாடகமாயினும் நாடக ஓட்டமோ, சுவையோ, விறுவிறுப்போ, சுறுசுறுப்போ அணுவளவும் தடைப் படவில்லை.

அளவுக்குமீறிய கொச்சை மொழிநடை கற்றோர் நெஞ்சைக் காயும். ஆனால். அவரது கற்பனையும், நகைச்சுவையும் உயர்ந்தோங்கி ஒளிர்வதால், நடையின் குறைபாடு மறைந்து விடுகிறது!

அறிஞனிடம் மடமையும், மடவனிடம் அறிவுடைமையும் அமையும் என்னும் உண்மையை இரு சபாபதிகளின் வழியாகவும் நாடகத்தில் காட்டுகிறார் ஆசிரியர்! சபாபதித் தன்மை இந்நாடகத்தில் பெரும்பாலோரிடம் ஒவ்வோரளவில் திகழ்தலை அறியலாம். ஆங்கிலர் ஆட்சிக் காலச் சூழ்நிலை நாடகம் இது. காலத்தின் அழுத்தம் கதையில் ஆழ்ந்த சுவட்டினைப் பொறித்துள்ளது. ஆங்கிலப் பற்றும் ஆங்கிலத்தில் ஆழமற்ற போலியறிவும் உடையோரை நாடகாசிரியர் நன்கு எள்ளி நகையாடுகிறார். ஆங்கில மரபுத் தொடர்கள் பிறழ உணரப்பெற்றால் எவ்வளவே நகைச்சுவை நிகழ்ச்சி விளையும் என நாடக வாயிலாக விளக்குகிறார்.

கதைத் தலைவியை அறிவும் திறமையும் நுண்மை ணுணர்வும் வாய்ந்தவளாக உருவாக்கி யுள்ளார் பம்மலார்! பாவேந்தர் படைத்த கதைத் தலைவியரும் இத்தகு ஆற்றல் மிக்க அணங்குகளேயாவர்.

இடைக்காலத்துத் தமிழ் நாடகப் பாங்கின் இயல்பைக் காட்டும் அருஞ் சின்னமாக விளங்கத்தக்க சபாபதியின்கண் கதைக் கட்டுக்கோப்பில்லை: காட்டாறு விரைந்தோடுவதுபோல உரையும் நிகழ்ச்சியும் விரைகிறது.

ஒழுக்க வரையறைகளை மறைமுகமாக ஆசிரியர் ஓரளவு வற்புறுத்த முயன்றுள்ளமை பாராட்டத் தக்கதாகும். வயிறு வலிக்கச் சிரிக்க வைக்கும் தமிழின் தலைசிறந்த நகைச்சுவை நாடகமான சபாபதி இலக்கியத் தகுதியில் உயர்ந்த இடம் பிடிக்காது; ஆயினும், மக்கள் நெஞ்சில் பெரிதும் இடம் பிடிக்கத் தவறாது. தேர்வு, தேர்வின் முடிவு வெளி வருதல், மாணக்கர் தற்கொலை முயற்சியில் தலைப்படல், கல்வியில் அச்சம் ஆகியவற்றையும் 'எள்ளில்' உணர்வோடும் அங்கதத் தன்மையோடும் ஆசிரியர் கையாண்டுள்ளார்.

'சபாபதி' நாடகம், நகைச்சுவையைக் கையாளுவதற்கு முதல் ஒற்றையடி வழி யமைத்ததாகும். ஆனால், அதனிடம் திகழும் பண்பாடு என்னும் நிலை பெற வேண்டிய ஒன்றாகும் நாடகப் பண்பும், தமிழ்ப் பண்பும் சிதையாத வகையில் நாடகத்தை இயற்றிய நாடகத் தந்தையைத் தமிழினம் நனி பாராட்டுவது இயற்கையேயாகும்.

[முற்றும்.]

"இது கூக்குரலா அல்லது கொள்கைக் குரலா?"

தமிழா! தன்மானத் தோழா! தரணி புகழ் படைத்த தமிழைக் காக்கும் நண்பா விழி! உறங்காதே! தூங்கியது போதும் துடித்தெழு! உன் வீரம் எங்கே? நீ வாழ்ந்த நிலை எங்கே? "விந்தியம் வந்தவர் வர வடக்கச் சூழும் வியன் கடல்கள் முப்புறப் பகைத் தடுக்க இந்தமாநிலம் முழுதாண்ட என்னரும் தோழா! கத்தும் கடல் சூழ்ந்த கன்னித் தமிழகத்தில் எத்தர்கள் நுழைவதற்கு முன்பிருந்த உன் எழில் மிக்க நாகரீகம் எங்கே? என்று தம்பிகளாகிய நம்மையெல்லாம் தட்டியெழுப்பி, வாழ்வித்த நம் "அண்ணா" நம்மிடம் இல்லையே என்ற எண்ணத்தால் எத்தர்கள் இன்று மனம் போனபடியெல்லாம் உளறித் திரிகின்றனர்.

முன்பு நம் தமிழ்த் திருநாட்டில் அரசாண்ட மன்னர்களை நமக்குத் தெரியும். வீர முரசும் கட்டிலினின்றும் நீராடக் கொண்டு செல்லப்பட்டிருந்தது. அவ்வேலை, எண்ணெய் நுரை முகந்தாற்போல, மெல்லிய பூ கிடந்த, இம்முரசு கட்டிலில் உண்மையறியாது உறங்கிக் கிடந்தேன். நீ தமிழ் அறிந்தமையால் என்னை இரு கூறாக்காது, நின் ஓங்கிய வாளை விட்டெறிந்து, கவரி வீசியதும் ஓரளவு பொருத்தமானதே! அத்துடன் அமையாது அருகே வந்து, நின் வலிய முடிவுத் தோளால் சாமரங் கொண்டும் குளிர வீசி நின்றனை! வெற்றி பொருந்தும் தலைவனே! இங்கே புகழ் உடையர்க்கு அல்லாது உயர்நிலை உலகத்து வாழ்வு கிடையாது, என்று பாராட்டப்பட்ட மன்னர் வரிசையில் வழிவழியாய் வந்தவர்களை எத்தர்கள் எப்படி ஏமாற்றினார்கள் தெரியுமா?

கன்னி இளமான்களின் கண்களிலிருந்து வழிந்த காமரசம் இந்த நாட்டுக் காவலர்களின் கருத்தை கரைத்தது. தங்க நிகர் மேனி கொண்ட தையலர்களின் அங்க அசைவுகளில் மின்னிய பேரழகு, கோட்டையிலே கொடி பறக்க, ஆண்டு வந்த கோவேந்தர்களைசிலையாக்கியிருக்கிறது! சித்தம் தடுமாறச் செய்திருக்கிறது, சிந்திக்கும் திறனை சிதறடித்திருக்கிறது...

மாளிகையிலே மஞ்சத்திலே மனங் கவர்ந்த மங்கையர்களுடன் மகிழ்ந்து கொஞ்சிய மாவீரர்கள்: இந்த சாக்கடைப் புழுக்களோடு சல்லாபம் கொண்டு நேரத்தையும் நினைப்பையும் மறந்து விட்டிருந்தார்கள்.

காதலிலே, கவிதையிலே களம் போகும் பேச்சு, கணவனுக்கும் மனைவிக்கும் அதுவே தம் மூச்சு; என்று வாழ்ந்த வீரப்பரம்பரையை வீழ்த்த அவர்கள் கையாண்ட முறைஇருக்கின்றதே, அப்பப்பா... .... அதை நினைத்தாலே எம் நெஞ்சம் நடுங்குகிறது. கோமள வல்லிகளைக் கூட்டிக்கொண்டு வந்தார்கள். சொக்க வைக்கும் சுட்டு விழி சுந்தரிகளைத்தான் தங்கள் ஆயுதமாகக் கொண்டிருந்தார்கள்.

— எம். ஏ. ரகீம்பேக் —

இப்படி எப்படி யெல்லாமோ மன்னாதி மன்னர்களை மண்ணோடு மண்ணாக்கினர், அன்று! அதுபோலின்று இவ்வரசை இங்கிருந்து சென்ற, நாம் அனுப்பி வைத்த நம் நலனில் நாட்டமுடையோர் என நம்பி அனுப்பிவைத்த, தமிழர்களை மதிமயங்கச் செய்து நமக்கெதிராக, நம் கொள்கைளுக்கு எதிராக, திருப்பி விட்டிருக்கும் செய்கையைக் கண்டு ஒருகணம் கண் கலங்கினாலும், மறுகணம் நகைக்காமலிருக்கமுடியுமா? கட்சி வேறாக இருக்கட்டும் கருத்துமாறாக இருக்கட்டும். ஆனால் இனம் இரண்டல்ல என்பதை உணரத் தவறிவிட்டார்கள். தமிழினத்தை அவர்களுடைய வளர்ச்சியை குழித்தோண்டிப் புதைக்க கங்கணம் கட்டியுள்ளார்களெனில், அது அவர்களுடைய அறியாமைக்கு, பகுத்தறியாமைக்கு, எதிர் கால விளைவுகளுக்கு. ஓர் முன்னறிவிப்பாகும். இதை இங்கு சுட்டிக்காட்டுவது மாற்றுக் கட்சியினருக்கு மட்டும்அல்ல! தாய்மொழிப் பற்றுள்ள, தாய்நாட்டுப்பற்றுள்ள எல்லோரும் உணரவேண்டும் என்பதற்காகத்தான்.

மக்களைத் திசை திருப்பவே "மாநில சுயாட்சி" என்று மக்களை புரிந்து கொள்ளாதார், மக்களை மதிக்கத் தெரியாதவர்கள், மக்களாட்சியை மதிக்காதவர்கள் பேசி திரிகின்றனர். மாநில சுயாட்சி என்பது மாநிலத்தின் கொள்கைக் குரல் என்பதை உணராத குறைமதியோர், இதைக் கூக்குரல் என்கிறார்கள். அவன் கட்டிய கோவிலிலே அவனுக்கே இடமில்லை என்ற நிலை இராசராச சோழனுக்கே உண்டாக்கி உள்ளனர். மாநில சுயாட்சி தமிழ் நாட்டுக்கு மட்டுமல்ல, எல்லா மாநிலங்களுக்கும் சுயாட்சி வேண்டும் என்று நாம் கேட்பதைப் பார்த்து வேங்கைகள் இன்று வேதாந்தம் பேசுகின்றன.

கட்சி கட்டுப்பாடு காரணமாக மற்ற மாநில முதல்வர்கள் கை கட்டி வாய் பொத்தி மாநில சுயாட்சிக் கொள்கையை வெளிப்படையாகச் சொல்லாமல் திண்டாடும்போது நமது தமிழக முதல்வரின், கலைஞரின் குரல் கேட்டு கதி கலங்குகின்றனர் கலகக்காரர்கள்.

மத்திய அரசுக்கு மாநில அரசுகள் பக்க பலமாகத்தான் இருக்க முடியுமேதவிர, பக்கவாத்தியமாய் இருக்கமுடியாது என்று கலைஞர் அடிக்கடி கூறுவதுண்டு, மத்திய அரசு தீட்டிய எந்த நற்பணிகளுக்கும் நம் மாநில அரசு குந்தகமாய் இதுவரை இருந்ததில்லை. இருப்பினும் நமக்கு உரிய உரிமையை கொடுப்பார்கள் என்று கலைஞர் அவர்களுக்காக மட்டுமன்றி, தமிழகத்தில் வாழும் நாலுகோடி தமிழ் மக்களுக்கு கேட்பதில், இந்த நாலு கோடி தமிழர்களாகிய திரு. மோகன் குமாரமங்கலமும், திரு. சுப்பிரமணியமும் அடங்குவர்.

நமது மாநில சுயாட்சிக்கொள்கையினை உணர்ந்து சுயாட்சி கேட்

பதை சரி என அறிந்து எதிர் வரிசையில் இருக்கும் திரு. விஞயகம் போன்றவர்கள் எல்லாம் ஒவ்வொருவராக நம்பால் பற்று கொண்டிருக்கும் இச் சமயம், நேற்று நம்மைப் பார்த்து "கொள்கையில்லாக் கட்சி" என்று கூறியவர்கள் இன்று இவர்கள் மாநில சுயாட்சி என்ற கொள்கைக்காகவே மத்திய அரசுடன் போராடுவதைக்கண்டு கண்கலங்கி நிற்கின்றூர்கள்.

மொழி ஆதிக்கத்தைப் போல பொருளாதார ஆதிக்கம்செலுத்த மத்திய அரசு கங்கணம் கட்டிக் கொண்டுள்ளது. என்பதை மக்கள் உணர்ந்துவிட்டார்கள்.

குன்ருதவளத்தோடு கொற்கையிலே முத்தெடுத்து செந்நெல்லேயும், செங் கன்னலேயும் இன்னபிறவும் இல்லேயெனுது உலக நாடுகளில் வளங் கொழிக்கும் வாணிகத் தொடர்பு கொண்டிருந்த தமிழன் வாணிபத்தின் மூலம் கலே, கலாசாரத்தைக் கமழச் செய்த தமிழினம் இன்று வெளிநாட்டு தொடர்புக்கு ஏங்கி நிற்கும் நிலே, மண்ணில் மறைந்திருக்கும் கனி வளங்களேத் தொழில் வளர்ச்சிக்கு பயன்படுத்த அனுமதி கோரி நிற்கும் அவலநிலே. இவ்வளவு அதிகாரங்களே வைத்துக்கொண்டதோடு அல்லாமல் மாநிலத்தின் அதிகாரங்களே மேலாகஇருந்து கண்காணிக்க ஆளுனர்களே வேறு மத்திய அரசு அமர்த்தியிருப்பது விந்தையிலும் விந்தை......

மத்திய அரசிடம் உள்ள அதிகாரங்களில் ஒன்று மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளே சட்டமன்றத்திலே அமர்த்தாமல் ஜனுதிபதி ஆட்சி நடத்தப்பட்டது (கேரளாவில்) நினேவிருக்கலாம்.

நமது இந்தியாவைப் போன்ற பெரிய நாடுகளில் கூட்டாட்சி அமைப்பில் மததிய அரசு பலம் பொருந்தியதாக இருக்கவேண்டும் என்பதே நமது கொள்கை.

அதிகாரங்கள் பரவலாக்கப்பட வேண்டும் என்பதே "மாநில சுயாட்சியின்" நோக்கம். எங்களுடைய மாநில சுயாட்சிக் கோரிக்கை, இந்தியாவினின்றும் தமிழ்நாட்டை பிரித்துக்கொள்ள வேண்டும் என்பதல்ல, மாருக எல்லா மாநிலங்களுக்கும் அதிக உரிமைகள் மக்கள் நல்வாழ்விற்காக வேண்டும் என்பதேயாகும்.

★

உடைபடாத தேங்காய்...!



["வாங்கோ.........." என்று இனிய முகத்தோடு எங்களே வரவேற்ற தேங்காய் சீனிவாசன் அவர்கள், அன்று அவசரமாக கற்பகம் படப்பிடிப்பு நிலேயத்திற்கு செல்ல இருந்தார். அவருக்கே இயல்பான மகிழ்ச்சி வரவேற்புடன் எங்களுக்கு நேரம் ஒதுக்கி பொறுமையோடு பதில்கள் கூறியிருக்கிருர். எங்களின் விஞக்களும் அவருடைய பதில்களும் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்தவை அல்ல; ஆனுல் வாசிப்பதற்குச் சுவையானவை.]

படித்து மகிழுங்கள்.........!

கேள்வி: கலேஞருடைய ஆட்சிச் சிறப்பைக் கூறுங்கள்?

பதில்: எதிர்க் கட்சியினரின் குமுறலேப் பார்த்தாலே கலேஞரின் ஆட்சியின் சிறப்பு தெரியவில்லேயா.

கேள்வி: கலேக்கு அவர் செய்த முக்கிய சேவையாக நீங்கள் எதைக் கருதுகின்றீர்கள்?

பதில்: கலேஞர்களின் தலேவர் கலேஞர் முதல்வராக இருப்பதே எங்களேப் போன்ற கலேஞர்களுக்கு அவர் செய்யும் சேவையாகும்.

கேள்வி: அண்ணுவின் நாடகங்களில் ஒன்றைச் சென்னேயில் அரங்கேற்றும் உத்தேசம் உண்டா?

பதில்: பாகுபாடு இல்லாமல் பண்பாடு இருந்தால் அரங்கேற்றத் தயாராக இருக்கிறேன்.

கேள்வி: உங்கள் வாழ்வில் நீங்கள் சாதிக்க விரும்பும் காரியம் என்ன?

பதில்: இந்த உடலில் உயிருள்ள வரை நாட்டிற்கும் வீட்டிற்கும் தொண்டு செய்வதல்லாமல் வேறு ஒன்றும் அறியேன் பராபரமே!

கேள்வி: இந்தியாவின் சிறந்த நடிகர் எம்.ஜி.ஆர். — இதுபற்றி உங்கள் கருத்தென்ன?

பதில்: இந்தப் பட்டம் அவருக்கு மிகச் சாதாரணமானது. அவரைப் பொருத்தமட்டில் கலேயுலகில் அவர் ஒரு காந்தி!

கேள்வி: "சோ"வின் அரசியல் 'விட்'டுகள் பற்றி நீங்கள் என்ன நினேக்கிறீர்கள்?

பதில்: காற்றிலே பறந்து வரும் 'எச்சில் இலே' மறு காற்றிற்கு குப்பைத் தொட்டிக்கே போய்ச் சேரும்.

கேள்வி: சரித்திர நாடகங்களே அரங்கேற்ற நீங்கள் ஏன் முனேவதில்லே?

பதில்: சரித்திர நாடகங்களில் வரும்கதாபாத்திரங்களுக்கேற்ப ஆடை ஆபரணங்களே அணிவதற்கு பலமில்லாத பலவீனமே காரணம்!

கேள்வி: பகுத்தறிவுக் கொள்கைகள் பற்றி உங்களின் கருத்து என்ன?

பதில்: தந்தை பெரியாரை அணுகி இதற்குப் பதில் அளிக்கிறேன்.

கேள்வி: கட்சி மாநாடுகளில் நீங்கள் ஏன் கலந்துகொள்வதில்லே?

பதில்: தீவிர திட்டங்களுக்கும், தீர்மானங்களுக்கும் இடையே "தேங்காய்" அங்கே உடைபட வேண்டாமென்பதுதான்.

கேள்வி: அண்ணுவைப்பற்றி சில வரிகள்.........

பதில்: அரசியல் தெய்வம்; கலேயின் பொக்கிஷம்; அன்பின் இருப்பிடம்; அருமைத் தம்பிகளுக்கு கடமை, கண்ணியம், கட்டுப்பாடு இவற்றைக் கற்றுத் தந்த தென்ஞட்டுகாந்தி; கழகத்தின் (அணேயா நந்தா விளக்கு!

அதன் வெளிச்சத்தில் வாழ்பவர்கள்தான் எங்களேப் போன்ற தம்பிகள்... பேட்டி: பாபு, பழநி.

வளை மனமே!

(பாவலர். எழிற்கோவன்)

சீருடனே வளைந்துலகை வளர்க்கின்ற
செம்பரிதிச் செம்மை கண்ட
நேருலகாம்; நாம்வாழும் நிலவுலகும்;
நிலையிதனின் நேராய்ச் செப்புந்
தூரநிலைப் பலகோள நிலையெவையும்
வளைந்தனவாய்த் துலங்கிச் சுற்றும்
பேரியலைக் கொண்டன்றோ பெயராத
பீடறிந்தோம்; பெரும்பொய் நெஞ்சே!

பலகரடு முரடுபள்முன் வளைந்தேகிச்
சுழல்கின்ற பணியை யேந்தி
மலர்கின்ற சக்கரத்தின் மகிமையினால்
ஊர்திகளின் மதிப்பு மிஞ்சும்!
நிலவுகின்ற உழவினர்தம் நெல்விளைத்து
நிறைக்கின்ற நீதிக் கூற்றும்
உலவுமவர் உடல்வளைத்து உழைக்கின்ற
உழைப்பால்தான் உயர்ந்து நிற்கும்!

பல்லுயிரின் உடலமைப்பும் வளைந்திணைந்தே
பணியாற்றும்; பகைவர் தம்மை
வெல்லுகின்ற படையெடுப்பும் வளைந் தெதிர்க்கும்
வகையால்தான் வெற்றி யேற்கும்!
கல்வியெனுங் கலையமுதம் மனம்வளைந்து
கற்றால்தான் கனிமை காட்டும்!
நல்லுலகில் வளைந்துதரும் வாழ்வியலே
நயமாகும்; நனிசேர் நெஞ்சே!

உடல்வளைத்துத் தருகின்ற உயர்வேந்தும்
நாணல்முன் உதித்துப் பாயும்
கடலலையே யானாலுங் கனிந்ததனை
யொறுக்காது கடந்து மேவும்!
படமாடும் பாம்புயிரும் பண்ணிசைக்கு
மயங்கிவிடும்; பணிவை யேந்தி
நடமாடும் மனத்தாரை நானிலமும்
வரவேற்கும்; நவில்வாய் நெஞ்சே!

மலர்பின்னி வளைகின்ற மலிவுநிறை
நார்நிலையே மாலையாக்கும்!
குலமங்கை மனம்வளைந்து கொடுக்கின்ற
குணப்பேற குடும்பம் வாழ்த்தும்!
நிலநிலையும் வளைந்துதரும் நீதிநெறி
நிறைத்தன்றோ நிலைத்துநிற்கும்!
உலகத்தின் முன்வளையும் உணர்வினரை
உயர்வணைக்கும்; உரைப்பாய் நெஞ்சே!

நெடுமலைக்கண் நீள்வளரும் நிலையேகி
நிற்கின்ற நெறிக்கோள் மூங்கில்
கடிதேகுங் காற்றினுக்கு வளைந்ததன்பின்
நிமிர்ந்துவிடும்; கனிவாய் வாழும்!
கொடிமங்கை மலருடலும் கூட்டின்பம்
பெறவளையும்; கொங்கை வண்டாய்ப்
படிகின்ற மனவுடலும் பாங்குடனே
வளைந்தணைக்கும்; பகர்வாய் நெஞ்சே!

தாமரையின் கொடிவளைந்து தண்ணீரின்
நிலைக்கேற்ப தாழ்ந்திறங்கும்!
நாமறிந்த செந்தமிழும் நாவளைக்கத்
தான்பிறக்கும்: நாட்டை யாளும்
கோமகனும் குடிக்கேற்ப வளைந்தாளுங்
குணத்தால்தான் கோயில் காண்பான்!
நாமகளும் நற்றமிழ்முன் வளைந்தன்றோ
நயக்கின்றாள்; நலங்கேள் நெஞ்சே!

தலைக்குனிவு தளபதிகள்!

நாடி தளர்ந்துபோன கட்சியின் பிதாவின் ஆசியுடன் காலத்தால் ஒதுக்கப்பட்ட பெருந்தலை நாயகர்களும்,

எந்த நாட்டிடம் விசுவாசம் எனப் புரியாது வாழ்வை நடாத்திடும் மணவழகர்களும், தாவுதலை ஊக்குவிக்கும் தலைமை நாயகிகளும்,

'சோ, சோ' என ஆலோலம் பாடுவதாலேயே பல்லக்கு ஏறிவிடலாம் என அரங்கேறி வட்டாடும் விகடகவி வித்தகர்களும் இன்னும் பலரும் கும்பலாக ஒன்று கூடி பத்திரிக்கை வாயிலாய் ஓலமிடத் துவங்கிவிட்டனர்.

'ஊழலோ, ஊழல்' என்று ஊளையிடத் துவங்கி, ஓய்ந்துபோன சாய்வு நாற்காலிகள் சரியான வாய்ப்பாகக் கருதி சாலூன்றி நிற்கத் துவங்கி இருக்கிறார்கள்; ஒரு பிரச்சினையில்.

அந்தப் பிரச்சினை: 'பத்திரிக்கை அலுவலகம் தாக்கப்பட்டது; பத்திரிக்கை சுதந்திரம் பறிக்கப்படுகிறது; தகுந்த பாதுகாப்பு இல்லை' என்பது வலுவற்ற அவர்களுக்கு வலுவுள்ள பிரச்சினையாகப் பட்டுவிட்ட இந்தப் பிரச்சினையில் ஆடாத ஆட்டமெல்லாம் ஆடிவிட்டுத்தான் ஓய்வார்கள்.

அந்தத் திருக்கூட்டத்தினர் மத்திய உதவியினை அழைக்கிறார்கள். 'வருகின்றது வருகின்றது, வந்தே விட்டது' என வரவேற்பு ஓலையை வாயார ஓயாது சொல்லத் துவங்கி விட்டார்கள். ஏன்?

'எங்கும் எங்கள் ஆட்சி. இங்கு மட்டும்...' எனப் பெருமூச்சுவிட்டு ஏதாவது வாய்ப்பு கிடைக்காதா? கிடைத்தால் கவிழ்த்துவிட்டு [illegible]லில் ஏறி அமரமாட்ட[illegible], அமர்ந்து 'ஒரு கை' பார்க்[illegible]டாமோ' என மனப்பால் [illegible]துக்கொண்டு இருக்கும்; தொ[illegible]டர்கள் இல்லா தொண்டைமார்களுக்கு அழைப்பு அனுப்பிவிட்டார்கள். அனுப்பட்டும். அனுப்பட்டும். அதற்குமேல் ஆவதை காலம் காட்டும்; காண்போம்.

அன்றொரு நாள்......நினைவிற்கு வருகின்றது 'நம் கழக இதழ்கள்—நாடகங்கள்—நூல்கள் தடை செய்யப்பட்ட காட்சி; கழகக் கொள்கைகளை எழுதிய, பேசிய எழுத்தாளர்களை கைது செய்த காட்சி;

பத்திரிக்கைகள் கொளுத்தப்பட்ட, அலுவலகம் தாக்கப்பட்ட காட்சி' மறந்தா போய்விடும்.

இவையெல்லாம் இப்பொழுது நினைவுகூர்வதால் நடந்துள்ள நிகழ்ச்சிகளுக்கு வருத்தம் கொள்ளவில்லை; வரவேற்கின்றோம் என்று பொருள் அல்ல.

நமது கழகத் தலைவரும், தமிழக முதல்வருமான மாண்புமிகு டாக்டர் கலைஞர் அவர்கள் தமது வருத்தத்தைத் தெரிவித்துக் கொண்டு இருக்கிறார்கள். ஆனாலும் [illegible]தத்தை வாதத்தினர் சொல்லு[illegible]கிறார்கள் 'கழகத்தினர் ஊக்கு[illegible]விட்ட[illegible]க!

பத்திரிக்கை தாக்கப்பட்டுவிட்டதாகப் பதறும் பரமாத்மாக்கள், அதே மூச்சில் அதனையே தங்கள் 'வளர்ச்சி'க்கும் வளமாக்கிக் கொள்ளும் பாங்கினைக் கண்டால்—அந்தத் தாக்குதலும் அவர்களாலேயே நடத்தப்பட்டு பெரிதாக்கப்படுகின்றதோ என்றும் நினைக்க வேண்டியிருக்கின்றது.

அந்த 'வளர்ச்சி'யை உண்மையான வளர்ச்சியாக நினைத்து, நம்மை அரசியல் களத்தில் சந்திக்க வேண்டி வந்தார்களே யானால்... அது, 'மண் குதிரை' நம்பி ஆற்றில் இறங்கிய அறிவில்லாதவர் செய்கையாக முடியும் என்பதை இந்த சமயத்தில் அந்த பரிதாபகரமானவர்களுக்குச் சொல்லக் கடமைப்பட்டிருக்கின்றோம்.

இம்மாதிரியான செயல்களில் ஈடுபட சமூக விரோத சக்திகளுக்கு பாதுகாப்பு அளித்த முன்னாள் நாயகர்களும் பழைய கூட்டாளிகளும் தாங்களே அந்தச் சக்திகளுக்கு ஆட்பட்டு, அல்லல் உறுவதை நினைத்து பதறுகிறார்கள். பரிதாபப்படுகின்றோம்.

—குடந்தை சேது.

அறிவிப்பு

வினா - விடைப் பகுதிக்கு வாசகர்களது வினாக்கள் வரவேற்கப்படுகின்றன. சுருக்கமாகவும், தெளிவாகவும் பண்பாடுள்ளனவாகவுமிருக்கவேண்டும். அஞ்சலட்டையில் எழுதினாலே போதுமானதாகும்.

— ஆசிரியர்.

ஆசிரியர் வெளியிடுபவர் சி. என். ஏ. இளங்கோவன் அவர்களால், காஞ்சிபுரம்-3, 86, திருக்கச்சிநம்பித் தெரு, அல்லி அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்படுகிறது.